## சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

**அசல் வழக்கு எண் : 106/2019**

**PW1 – திரு. வைஸ்ராஜ், த/பெ. மாணிக்சந்த்**

**09.07.2025**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**குறுக்கு விசாரணை**

**நேரம் 14.50 மணி**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஒரு சொத்தை நபர் ஒருவர் வாங்கும்போது சொத்தின் அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்த பின்னர் தான் வாங்குவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் சொத்து ஏலமிடப்பட்ட சொத்து என்றாலும் அடமானம் பெற்றவருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் ஏல அறிவிப்பு ஆகியவற்றை சரிபார்த்த பிறகு தான் ஏலம் எடுத்தேனா என்றால் ஏல அறிவிப்பை மட்டும் பார்த்தேன். வழக்கறிஞர் அறிவிப்பை நான் பார்க்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஏல அறிவிப்பின் சான்றிட்ட நகல் ஆகும். மேற்படி ஏல அறிவிப்பு சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏல அறிவிப்பில் யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரமும், ஏல தொகையை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சொத்தை ஏலம் எடுப்பதற்கு முன்பு அடமான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எந்த சொத்து எந்த ஆவணம் என்று தெரியாமல் தான் ஏலத்தில் கலந்துகொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அடமானம் பெற்றவர் பிரதீப்குமார் என் மருமகன், வனிதா என்னுடைய மகள், பிரதீப்குமாரின் தந்தை பிரேம்பிரகாஷ் என் சம்பந்தி என்றால் சரிதான். மேற்படி மூவரும் சேர்ந்து நிதி நிறுவனம் நடத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் மகளும், மருமகனும் சொல்லி தான் நான்

சொத்தை ஏலத்தில் எடுத்தேன் என்றால் அவர்கள் என்னிடம் கூறியபோது நான் பார்க்கிறேன் பிடித்தால் ஏலத்தில் எடுக்கிறேன் என்று கூறினேன். இதற்கு முன்னர் ஏதாவது சொத்தை ஏலத்தில் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து வாங்கி, விற்பனை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் அடமான பத்திரத்தை எப்போது பார்த்தேன் என்றால் எப்போது பார்த்தேன் என்று ஞாபகமில்லை. வழக்கு சொத்தை ஏலம் எடுக்கும்போது என்ன நிலையில் இருக்கிறது என்று பார்க்காமல் தான் ஏலத்தில் எடுத்தேனா என்றால் பார்த்து தான் ஏலத்தில் எடுத்தேன். சொத்தின் ஆவணங்களை என் மருமகன் மற்றும் மகள் ஆகியோர் பார்த்தார்கள் என அவர்கள் பொறுப்பில் விட்டுவிட்டேன் என்றால் சரிதான். ஏல சமயத்தில் கடன் பெற்றவர் இவ்வழக்கின் 1ஆம் பிரதிவாதி ஜெயந்தி என் மகள் மற்றும் மருமகனிடம் 25 வருடமாக வேலை பார்த்து ஊரியர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஏலத்தில் என்னை தவிர எத்தனை நபர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் 15 பேர் கலந்து கொண்டார்கள். குறைந்த பட்ச ஏலத் தொகை எவ்வளவு நிர்ணயித்தார்கள் என்றால் 5 லட்சத்தில் ஆரம்பித்து நான் 50 லட்சத்திற்கு ஏலத்தில் எடுத்தேன். நான் அவ்வாறு ஏலம் எடுக்கும்போது அது 50 லட்சத்திற்கு பெறுமா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். சொத்தை ஏலம் எடுத்த பிறகு என் மருமகனிடம் ஆவணங்களை கேட்டேனா என்றால் கேட்டேன். வழக்கறிஞர் அறிவிப்பு படித்து பார்த்தேனா என்றால் என்னிடம் என் மருமகன் கொடுக்கவில்லை. ஏலம் எடுத்த அன்று எவ்வளவு பணம் கட்டினேன் என்றால் ரூபாய் 12,50,000 காசோலையாக கொடுத்தேன். அன்றைய தினம் என் வங்கி கணக்கில் மேற்கூறிய பணம் வைத்திருந்தேனா என்றால் பணம் வைத்திருந்தேன். 1ஆம் பிரதிவாதி ஜெயந்தி எனக்கு எதிராகவும், என் மருமகனுக்கு எதிராகவும் மாதவம் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடுத்துள்ளார் என்றால் இந்த வழக்கு தொடுத்த பிறகு தான் மேற்கூறிய வழக்கு தொடுத்துள்ளார். மேற்படி அசல் வழக்கு 100/2018ன் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அசல் வழக்கு 100/2018ன் விவரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி வழக்கில் 12/02/2018 ல் ஏலம் 01/02/2018 அன்று ஆனந்தபாபு முதலாம் கடன்பெற்றவர் இறந்துவிட்டார் என்ற விவரம் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். ஏலத்திற்கான ஏற்பாடுகளை

செய்யும்போது அவர் உயிருடன் இருந்தார். ஏல தேதியன்று அவர் உயிருடன் இல்லை. ஏலம் விடுகிற ஏல நிறுவனம் கடன் வாங்கியவர்களின் முகவராக தான் கிரைய பத்திரம் செய்து கொடுப்பார்கள் என்றால் யார் ஆவணத்தை நிறைவேற்றியது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தின் படி நான் சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். இறந்து போன ஒரு நபரின் சொத்தை அவருடைய முகவர்களோ, அல்லது ஏல நிறுவனமோ வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல், ஏல அறிவிப்பு கொடுக்காமல் ஏலம்விடமுடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒரு சொத்திற்கான கிரைய ஆவணத்தை எழுதும் போது அந்த சொத்திற்கான உரிமையாளர் உயிருடன் இருந்தால் தான் எழுத முடியும் என்றாலும் அவர் உயிருடன் இல்லை என்றால் எழுத முடியாது என்றாலும் அவ்வாறு எழுதினால் செல்லுபடி அகாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என் மருமகன் சொல்லி தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஏலம் ஏடுத்த பிறகாவது சொத்தின் சந்தை மதிப்பை விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரிக்கவில்லை. சொத்தின் இன்றைய சந்தை மதிப்பு தெரியுமா என்றால் 70 முதல் 80 லட்சம் இருக்கும். ஒரு சொத்தை வாங்க வேண்டும் அல்லது ஏலம் எடுக்க வேண்டும் என்றால் எந்த ஒரு நபரும் அந்த சொத்தின் முழு ஆவணங்கள், வழக்கறிஞர் அறிவிப்பு உட்பட பார்த்தபின்னர் தான் சொத்தை ஏலத்தில் எடுக்க முடியும் என்றாலும் ஏலவிடும் நிறுவனம் ஏலம் விடுவதற்கு முன்பு ஆவணங்களை சரிபார்ப்பதற்கு காலம் கொடுக்கிறார்கள் என்றால் சரிதான். 13/08/2024 அன்று இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்து வரியை என் பெயரில் மாற்றம் செய்வதற்கு மனு கொடுத்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. உயிரோடு இல்லாத நபரின் சொத்தை ஏலத்தில் எடுக்க முடியாது என்றாலும் என் மருமகன், மகளிடம் ஒரு ஊழியரின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்றே அவர்களின் வாரிசுகளுக்கு அறிவிப்பு கொடுக்காமல் அவசரமான ஏலத்தில் விட்டு சொத்தை என் பெயரில் மாற்றியது செல்லாது என்றால் சரியல்ல. ஆகவே வா.த.சா.ஆ.6 என் படி நான் கோரியுள்ள சுவாதினம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>நேரம் 15.35 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.